குன்னூர் இரயில்வே கேட் அருகில் பாலம் கட்டும் பணி.

* வினா எண் 714— திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குன்னூர் நுழைவாயிலான இரயில்வே கேட் சமீபத்தில் முழுமையாக போக்குவரத்து தடை செய்து பாலம் கட்டுவது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) அதன் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

(இ) எப்போது அந்த வேலை முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம்.

(ஆ) ரூ 5. 00 இலட்சம்

(இ) இப்பணியை விரைவில் முடிப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் போர்க் கால அடிப்படையில் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே அந்தப் பாலத்தை ஒட்டி ஒரு பஸ் ஸ்டான்டு இருக்கிறது. அங்கே போக்கு வரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதால் அதைப் புதுப்பித்து தரவேண்டும், அதே நேரத்தில் சமீபத்தில் அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அந்த பஸ் ஸ்டான்டு பாலத்தை புதுப்பிப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா? அப்படி இருந்தால் அந்தத் திட்டத் தொகை எவ்வளவு? அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாலத்தைப் பற்றியது. அந்தப் பாலம் 5 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது அது உடனடியாக முடிக்கப்படும் நிலையில் இருக்கின்றது. பக்கத்திலே இருக்கிற பஸ் ஸ்டாண்டு புதுப்பிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பழைய பஸ் ஸ்டான்டை புதுப்பிப்பதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு தேவையான திட்டமாக இருக்கின்றது. ஆனால் புதிதாக பஸ் ஸ்டான்டு நிறுவுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய்கள் தான் மதிப்பீடாகும். சமீபத்தில் ஊட்டி சென்ற நேரத்தில் இவைகளை எல்லாம் பார்வையிட்டு வந்திருக்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் குன்னூர் பாலம் தொடங்கி ஒரு வருடம் ஆகியும், இப்போது பாதி வேலைதான் முடிந்திருக்கின்றது. அது எப்போது முடிவடையும். இன்னும் ஓரிரு மாதங்களில் மழைக்காலம் வரப்போகின்றது. அதற்குள் இந்த வேலை முடிவடையுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

1981 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 2 நாட்களுக்கு முன் என்னுடன் வந்திருந்தார்கள். அந்தப் பால வேலை நடைபெற்று வருகின்றது. கண்டிப்பாக சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

வேலூர் பேருந்து நிலையத்தினை விரிவு படுத்துதல்.

* வினா எண் 715—திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேலூர் பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் வேலை எப்போது துவங்கும்? திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: திட்டம் வேலூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியினுடைய பெருக்கம் அளவுக்கு மீறி போகின்றது. நாள்தோறும் திருவிழாக் கூட்டம் போல மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. எனவே உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம்தான் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு .ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த பஸ் நிலையத்தில் நிறைய ஆட்கள் பல ஊர்களில் இருந்து வந்து போகின்ற நிலைமை இருக்கிறது. இது இந்த நகரத்தின் மையமாக இருக்கிற காரணத்தினால், அங்கே கழிப்பிடம் கூட இல்லாமல் மக்கள் ரோட்டிலே உட்காரக் கூடிய நிலை இருப்பதாலும், அதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 36 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அது பரிசீலனையில் இருந்து வருகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமாக உள்ள வேலூரில் அந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லாமல், விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?